# DEO MAIN EXAM 2023
# PREMODEL EXAM
## கட்டாயத்தமிழ் தகுதித்தேர்வு

**மொத்த மதிப்பெண்கள்: 100** **நேரம்: 3 மணி**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

1. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

    1. வினைத்திட்பம் என்னும் அதிகாரம் கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக
    2. அடக்கத்தின் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?
    3. ஒழுக்கம் உயிரினும் மேலானது என வள்ளுவர் கூற காரணங்கள் யாது?
    4. திருக்குறள் ஓர் அறநூல் என்பதைவிட ஓர் வாழ்வியல் நூல் என்பதை நிறுவுக
    5. ஈகையின் சிறப்புகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

    மனிதர் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளும், செய்ய வேண்டிய கடமைகளும் உள்ளன. பெற்றெடுத்த பிள்ளையைப் பேணிக்காப்பது தாயின் கடமை. உணவும், உடையும், வீடும், கல்வியும் தந்து வளர்க்க வேண்டியது தந்தையின் கடமை, நல்ல மாணாக்கரை உருவாக்குவது ஆசிரியர் கடமை. கற்க வேண்டிய பாடங்களைக் கற்பதும் கல்வியில் ஊக்கம் காட்டுவதும் மாணவர் கடமை. பெற்றோர்க்கும், ஆசிரியர்க்கும், நாட்டுக்கும், பள்ளிக்கும் மாணவர்கள் கடமைப்பட்டவர்கள். மாணவர் நாம் கல்வி கற்கும் பள்ளியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். மாணவர் வகுப்பறைகளிலும், விளையாட்டுத் திடல்களிலும், பிற இடங்களிலும் அமைதி காக்க வேண்டும். கவிதை, கட்டுரை, சொற்பொழிவு, ஓவியம், விளையாட்டு முதலிய போட்டிகளில் கலந்து கொண்டு பள்ளிக்குப் பெருமைத் தேடித்தர வேண்டும். அமைதியும், அடக்கமும், இன்சொல் பேசுதலும் மாணவர் மீது மதிப்பை உண்டாக்கும்.

    **வினாக்கள்**

    1. தந்தையின் கடமை என்ன?
    2. மாணவர்கள் யாருக்கெல்லாம் கடமைப்பட்டவர்கள்?
    3. எவ்வெவ் இடங்களில் மாணவர்கள் அமைதி காக்க வேண்டும்?
    4. மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டிய போட்டிகள் யாவை?
    5. எவை மாணவர்க்கு மதிப்பை உண்டாக்கும்?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்கள்**

3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

செயற்கை நுண்ணறிவு (செய்யறிவு) தொழில்நுட்பம் இதழியல் துறைக்கு அச்சுறுத்தல் மற்றும் வாய்ப்பு என இரண்டு விதமாகவும் இருக்கும் என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செய்யறிவு தொழில்நுட்பம் இன்னும் சில ஆண்டுகளில் அனைத்துத் துறைகளில் உள்ள வேலை வாய்ப்புகளிலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் செய்யறிவு தொழில்நுட்பம் இதழியல் துறைக்கு அச்சுறுத்தலாக இருக்குமா என்ற கோணத்தில் லண்டன் ஸ்கூல் ஆ்.்ப் எகனாமிக்ஸ் கல்வி நிறுவனத்தின் இதழியல் துறை ஆய்வு நடத்தியது. கடந்த ஏப்ரல் - ஜூலை மாதங்களுக்கு இடையே 46 நாடுகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட செய்தி நிறுவனங்களில் செய்யறிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது குறித்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி செய்யறிவு தொழில்நுட்பம் இதழியல் துறைக்கு அச்சுறுத்தலாகவும் இருக்கும், அதே நேரத்தில் வாய்ப்பாகவும் இருக்கும் என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்ஜிபிடி, கூகுள் பார்டு மூலமாக ஏ.ஐ. செய்திகளை எழுதுவதாகவும் தலைப்புச் செய்திகளை உருவாக்குவதாகவும் 80% பேர் கூறினாலும், 60% பேர் தங்களுக்கும் வேலை வாய்ப்பு இருப்பதாகக் கூறுகின்றனர் அதாவது செய்யறிவு தொழில்நுட்பம் நேரத்தை மிச்சப்படுத்தும் என்றாலும் அதில் உள்ள சாத்தியக் கூறுகள், தகவல்களில் துல்லியத்தன்மை, வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட தொழில் நெறிகளில் பிரச்னைகள் வரலாம் என்று கூறுகின்றனர். செய்யறிவு தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு செய்தியை செய்தியாளர்கள் சரி பார்க்கும் நிலை இருக்கும் என்று தெரிய வருகிறது. உலகெங்கிலும் உள்ள இதழியல் துறை மற்றொரு அற்புதமான, அதே நேரத்தில் பயமுறுத்தும் தொழில்நுட்ப மாற்றத்தின் காலகட்டத்தைக் கடந்து செல்கிறது என்று ஆய்வின் இணை ஆசிரியரும் திட்ட இயக்குனருமான சார்லி பெக்கெட் கூறினார். செய்யறிவு தொழில்நுட்பம் என்பது பத்திரிகை மற்றும் செய்தி ஊடகத்தின் நெறிகளுக்கு (ethics) ஓர் அச்சுறுத்தல் என்றும், ஆனால் மேலும் திறமையாக பயனுள்ள நம்பகமானதாக மாற்றுவதற்கான ஒரு நம்ப முடியாத வாய்ப்பு என்றும் தெரிவித்தார். நேர்காணல் செய்திகளை எழுதுவது போன்ற பணிகளில் செய்யறிவு தொழில்நுட்பம் நேரத்தை மிச்சப்படுத்தும் என ஒப்புக்கொண்டுள்ள பத்திரிகையாளர்கள், துல்லியத்தன்மை மற்றும் துறை சார்ந்த நெறிகளுக்காக சரி பார்க்க வேண்டிய சூழல் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். அடுத்து மொழி ஒரு முக்கிய பிரச்னையாக இருக்கும் என்கிறது இந்த ஆய்வு. ஏனெனில் தொழில்நுட்பம் ஆங்கிலத்தில் எளிதாகக் கிடைக்கும் நிலையில் உலகளவில் அனைத்து மொழிகளிலும் கிடைத்தால் இன்னும் பயனுள்ளதாக இருக்கும் என்று சிலர் கூறியுள்ளனர்.

**கேள்வி எண் 4: 10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் - மண்பாண்டக்கலை - சுடுமண் சிற்பக்கலை - மூங்கில் கைவினை

**கேள்வி எண் 5: 10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

தெருக்கூத்து என்னும் பெயருக்கேற்ப, அது தெரு மேடைகளில் நிகழ்த்தப்பெற்றது. அது நாட்டுப்புறக் கலைஞர்களால் நிகழ்த்தப்பெற்ற புகழ் வாய்ந்த கலையாகும். அவற்றிற்கான கதைகள் இராமயாயணம், மகாபாரதம் மற்றும் பிற பழமையான புராணங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டவையே. பல பாடல்களையும் வசனங்களையும் நடிக்கும் போதே நடிகர்கள் சொந்தமாய் உருவாக்கிக்கொள்வர். புதினைந்துமுதல் இருபதுவரை உள்ள கலைஞர்களும், ஒரு சிறிய வாத்தியமுமே தெருக்கூத்தின் உறுப்பினராய் இருப்பர். வாத்தியத்தை இயக்குவோர் சிறந்த பாடகர் ஆவார் என்றாலும், நடிகர்களும் சொந்தக் குரலிலேயே பாடுவர். நடிக்கவும் செய்துகொள்வர். தெருக்கூத்து கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமானது

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின்கீழ் பயனடைந்த மக்கள் குறித்த விவரங்களை வட்டாட்சியர் சேகரித்துத் தலைமைச் செயலருக்கு அனுப்பக் கோரும் அலுவலக ஆணைக் கடிதம் வரைக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. மேதினி
2. மட்டற்ற
3. நீரோட்டம்
4. ஆகாயத்தாமரை

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. அல்<br>அள்
2. இளக்கம்<br>இலக்கம்
3. கலம்<br>களம்
4. மால்<br>மாள்

**c. பிரித்து எழுதுக**

1. அஃறிணை
2. இடப்புறம்
3. சீரிளமை
4. பொற்கோடு

 044-24339436, 42867555, 9840226187

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. மாதவி முதல் பரிசு பெற்றாள்
2. காமராசர் அவர்களை அனைவரும் அறிவர்
3. அவர்கள் விளையாட்டு வீரர்கள்
4. அவன் கல்வி கற்றான்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. குதிரைகள் எல்லாம் ஓடின
2. பல வீரர்கள் மடிந்தனர்
3. மரத்தில் பழங்கள் பழுத்தது
4. பாம்புக்குக் கண்ணே காதாக உதவுகின்றன

APPOLLO STUDY CENTRE